Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# பொழுதுபோக்கு மற்றும் மூத்தகுடிமக்களுக்கான மாதத்தை பிராம்ப்டன் நகரத்துடன் இணைந்து கொண்டாடுங்கள்

பிராம்ப்டன், ON (மே 31, 2023) – ஜூன் மாதம் முழுக்கவுமாக செயல்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, பொழுதுபோக்கு மற்றும் மூத்தகுடிமக்களுக்கான மாதமாக பிராம்ப்டன் நகருடன் சேர்ந்து கொண்டாடுங்கள்.

பிராம்ப்டன் நகரில் பொழுதுபோக்கிற்கான மாதம் அனுசரிப்பதில் பங்கேற்பதன் மூலம் ஆரோக்கியமான செயல்பாடுகளின் பலன்களைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்; இதில், தேசீய ஆரோக்கியம் மற்றும் உடற்பொருத்த நாள் மற்றும் சர்வதேச யோகா தினம் உள்ளிட்ட இலவச நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் அடங்கும்.

நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றி மேலும் அறிய வருகை தாருங்கள்: www.brampton.ca/recmonth.

**தேசிய ஆரோக்கியம் மற்றும் உடற்பொருத்த நாள்**
ஜூன் 3, காலை10– நண்பகல் 12
Chinguacousy Park
9050 Bramalea Rd

**சர்வதேச யோகா தினம்**
ஜூன் 21, காலை 7 – இரவு 9
Mount Pleasant Square
100 Commuter Dr.

ஜூன் மாதம் மூத்தகுடிமக்கள் கொண்டாடுவதற்கானது; இதில் நமது சமூகத்தில் வாழுகின்ற மூத்த குடிமக்களை ஈடுபடுத்தி கொண்டாட வைப்பதை பிராம்ப்டன் நகரம் தொடர்ந்து செய்து வருகிறது.

ஸ்ப்ரிங்ஃபெஸ்ட் (Springfest) மற்றும் தீத்தடுப்பு பற்றிய திறந்த நிலை நிகழ்வு (Fire Safety Open House) உள்ளிட்ட சிறப்பு நிகழ்வுகள் மற்றும் இலவச நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொள்ள 55 க்கும் மேற்பட்ட வயதுடையவர்கள் எங்களுடன் இணைய அழைப்பு விடுக்கிறோம்.

**Springfest**
ஜூன் 16
கண்காட்சி, காலை10– நண்பகல்12
மதிய விருந்து மற்றும் நடனம், 12 – 3 pm
Century Gardens Recreation Centre
340 Vodden St E.

ஸ்ப்ரிங்ஃபெஸ்ட் (Springfest) என்பது BioPed, Revera, Toronto Pearson மற்றும் Vyta ஆகியோரால் மிகப் பெருந்தன்மையுடன் நிதியாதாரம் வழங்கப்படுகிறது.

பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவை அமைப்பானது மூத்தகுடிமக்கள் பார்வையிடுவதற்காக தமது நிலையங்களை திறந்து வைக்கிறார்கள்; இதில் தீயிலிருந்து மற்றும் நிலை தவறி விழுவதிலிருந்து தங்களை முன்கூட்டியே காத்துக் கொள்வது பற்றி அறிந்து கொள்ளலாம், தீயணைப்பு வீரர்களைச் சந்திக்கலாம் மற்றும் சமுதாயத்தினருடன் பரஸ்பரம் உரையாடலாம்; பரிசுகள் பெறலாம் மற்றும் பரிசுகளை வழங்க முன்வரலாம்.

***தீயணைப்பு நிலையங்களில் மக்கள் பார்வைக்கான சமயம்***
ஜூன் 21, காலை10 am – பிற்பகல் 2
Fire Station 207
75 Vodden St. E.,

மேலும் அறிய 905.458.5580 ஐ அழைக்கவும் அல்லது firelife@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யவும்

நிலைத்துநிற்கவல்ல சமுதாயத்தினரை உருவாக்கி வடிவமைப்பதன் மூலம் முதுவயதினருக்கு நட்புறவாக இருக்கும் யுக்தியை உபயோகித்து, தத்தமது ஆயுட்காலத்தின் அனைத்து நிலைகளிலும் குடியிருப்புவாசிகளின் தனித்துவமான தேவைகளுக்கு பதிலளிப்பதில் நகரம் கவனம் செலுத்துகிறது.

நியூ ஹொரைசன்ஸ் (New Horizons) மானியம் பெறப்பட்டதின் ஒரு பகுதியாக, 2022 ஆம் ஆண்டில் மூத்தகுடிமக்கள் விபரங்கள் அடங்கிய களஞ்சியத்தை (Seniors Resource Directory) பிராம்ப்டன் நகரம் அறிமுகப்படுத்தியது. ஒரு பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் முக்கிய விபரங்களுக்கான அணுகலை வழங்குவதும், மக்களுக்குத் தேவையான சேவைகளைக் கண்டறிய உதவுவதுமே களஞ்சியத்தின்

குறிக்கோளாகும். பயனர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் தேடிக்கண்டறியும் வழிமுறையை எளிதாக்குவதற்கும் களஞ்சியம் 12 தலைப்புகள் தொடர்பான மையக்கருத்துக்கள் கொண்டதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மூத்தகுடிமக்களுக்கான மாதம் பற்றிய மேலும் விபரங்களுக்கு வருகை தாருங்கள் www.brampton.ca/seniorsmonth.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ஆயுட்காலத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மக்கள் தங்களுக்கான சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கேற்ற நகரத்தை உருவாக்குவதே பிராம்ப்டன் நகரத்தின் முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயமாகும். சமூகத்திற்கான அணுகல் மற்றும் மூத்தகுடிமக்களுக்கு ஆதரவை வழங்குவது என்பது, சமுதாயத்துடன் சொந்தம் கொள்ளும் உணர்வை உருவாக்க உதவுகிறது. பொழுது போக்கு மற்றும் மூத்தகுடிமக்களுக்கான மாதத்தை கொண்டாட ஆவலுடன் காத்திருக்கிறேன்; மூத்தகுடிமக்களுக்கு பிராம்ப்டன் நகரம் வழங்கவேண்டிய அனைத்து பொழுதுபோக்கு வாய்ப்புகளையும் தேடிக்கண்டறியவும், பிராம்ப்டன் நகருக்கு மூத்த குடிமக்கள் ஆற்றிய அர்த்தமுள்ள பங்களிப்புகளை கௌரவிக்கவும் விரும்புகிறேன்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

“நாங்கள் ஒன்றிணைந்து வலிமையுடன் இருக்கிறோம் மற்றும் பொழுதுபோக்கு திட்டங்களை அணுகுவதன் மூலம் ஒருவர் மீது  ஒருவர் அக்கறை கொள்ளும்போது, சமூகத்திற்கு ஆரோக்கியமான அடித்தளங்களை உருவாக்க உதவுகிறோம். இந்த ஜூன் மாதம், நாம் பொழுதுபோக்கு மற்றும் மூத்தகுடிமக்களுக்கான மாதத்தைக் கொண்டாடும் போது, நமது குழுக்கள் திரைக்குப் பின்னால் கடினமாக உழைத்து கொணரும் சில நம்பமுடியாத வேடிக்கைகள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்டு மகிழ அனைவரையும் அழைக்கிறேன்.”

*- ரொவினா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5; தலைவர், சமுதாய சேவைகள், பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca